## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 03.05.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் ஹஷ்ரின் 19 மற்றும் 20வது வசனத்தை ஓதினார்கள்:**

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ وَلْتَنْظُرْ نَفْسٌ مَّا قَدَّمَتْ لِغَدٍ ۚ وَاتَّقُوا اللّٰهَ ؕ
اِنَّ اللّٰهَ خَبِيْرٌۢ بِمَا تَعْمَلُوْنَ ۝ وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ نَسُوا اللّٰهَ فَاَنْسٰهُمْ
اُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ۝

*இந்த வசனங்களின் பொருள் : நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். ஒவ்வொரு ஆன்மாவும் நாளைக்கென்று எதனை அனுப்பியுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கறிகின்றான்.*

*அல்லாஹ்வை மறந்தவர்களைப் போல் நீங்கள் ஆகி விட வேண்டாம். அவர்கள் மறந்ததனால் அவன் அவர்களைத் தங்களையே மறக்கும்படி செய்து விட்டான். அவர்களே கட்டுப்படாதவர்கள் ஆவர். (59:19,20)*

அல்லாஹ்தஆலா நம்பிக்கை கொண்டவருக்கு அடிப்படை நிபந்தனையாக இறையச்சத்தை வைத்துள்ளான். இதனைப் பற்றிய எண்ணற்ற வசனங்கள் திருக்குர்ஆனில் உள்ளன. அதில் இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். இறையச்சத்தில் நிலைத்திருங்கள். அல்லாஹ் இந்த அறிவுரையை பல்வேறு வகையில் கூறியுள்ளான். பல்வேறு கட்டளைகளும் உள்ளன. அந்த கட்டளைகளின்படி செயல்படக் கூடியவர்களை, இறையச்சத்தின்படி செயல்படக் கூடியவர்களை முத்தகி என்று கூறியுள்ளான். மேலும் கட்டளைகளின்படி செயல்படாதவர்களுக்கு அவர்களது முடிவைக் குறித்து அச்சமூட்டியிருக்கிறான்.

தக்வா என்பது என்ன? இதன் பொருளை சுருக்கமான வார்த்தையில் கூறுவதாக இருந்தால் அதன் சராம்சம் என்னவென்றால், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதிலிருந்து பார்த்தோம் என்றால், இறை விருப்பத்திற்கு அனைத்தையும் விட முக்கியத்துவம் அளிப்பது, இறைவனை ஏகனாகவும், அனைத்து ஆற்றல்களும் உள்ளவனாகக் கருதி, அவனது உரிமையை நிறைவேற்றுவது, அவனது விருப்பத்தைப் பெறுவதற்காக அவனது படைப்பினங்களுக்குரிய உரிமையை செலுத்துவதாகும்.

**இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவனுடைய அமானத்துகளையும், நம்பிக்கையின் உடன்படிக்கையையும் முடிந்த வரை பேணி பாதுகாப்பது, தலை முதல் பாதம் வரை உள்ள ஆற்றல், உறுப்புகளில் அதாவது, வெளிப்படையான கண்கள், காதுகள், கைகள், கால்கள் போன்ற பிற உறுப்புகளும், உட்புறமான, உள்ளம் போன்ற ஆற்றல்களும், ஒழுக்கங்களும் இவைகளுக்கு எந்த அளவு ஆற்றல்கள் உள்ளனவோ அவற்றை தக்க சமயத்தில் தேவைக்கேற்ப உபயோகப்படுத்துவது, அனுமதிக்கப்படாத இடங்களிலிருந்து தடுப்பது, அவற்றின் மறைவான தாக்குதல்களிலிருந்து கவனமாக இருப்பது, இதனுடன் அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவது ஆகியவற்றையே மனிதனின் ஆன்மீகத்தின் அனைத்து அழகும் சார்ந்துள்ளது.

எனவே, இந்த தரத்தைத் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு எடுத்துரைத்துள்ளார்கள். நம்மிடம் எதிர்பார்த்தும் உள்ளார்கள். சில ஜுமுஆக்களுக்கு முன்னரும் அமானத்துகளையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டி இருந்தேன். இவற்றை

நிறைவேற்றுவது ஈமானுடன் தொடர்புடையதாகும். பொறுப்பாளர்களைக் குறித்து அன்று பேசப்பட்டது. நான் இன்று இதனைக் குறித்து மேலும் எடுத்துரைக்கின்றேன்.

இன்றைய காலத்தில் நம்பிக்கை கொண்டவர்களில், அஹ்மதிகள் நற்பேறு பெற்றவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு தான் நுட்பமான இறைவனுடன் கொள்ள வேண்டிய தொடர்பு பற்றி கூறப்பட்டுள்ளது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மீது செய்த மாபெரும் கருணையாகும். அவர்கள் மிகவும் விளக்கமாக ஒரு மூஃமின், இறை நெருக்கத்தைப் பெறக்கூடிய படித்தரங்களை எடுத்துரைத்துள்ளார்கள். நிச்சயமாக ஒவ்வொரு மனிதனுடைய தரமும், அது நன்மையின் தரமாக இருந்தாலும் சரி, புரியும் திறனாக இருந்தாலும் சரி, அறிவு மற்றும் ஞானத்தின் தரமாக இருந்தாலும் சரி அது வெவ்வேறாக இருக்கிறது. எல்லாருக்கும் ஒன்றுபோல் இருப்பதில்லை. எனவே எல்லாருக்கும் கட்டளை என்னவென்றால், தனது சக்தி மற்றும் ஆற்றலுக்கேற்ப அல்லாஹ்வுடன் செய்த உடன்படிக்கையை, அவனது அமானத்துகளை அதன் உச்சம் வரை எட்ட வையுங்கள். ஒவ்வொரு மூஃமினும் முயற்சி செய்து இந்த உச்சத்தை அடைவதன் பக்கம் கவனம் செலுத்தினால் தக்வாவின் வழியில் செல்லக் கூடியவராகக் கருதப்படுவார்.

கை, கால், கண், காது போன்றவைகளை உபயோகப்படுத்துகின்ற போது இவற்றை சரியாக உபயோகப்படுத்த கட்டளை உள்ளது. மேலும் எந்தக் காரியங்களைச் செய்வதிலிருந்து அல்லாஹ் தடுத்துள்ளானோ அதிலிருந்து தவிர்ந்திருப்பது கடமையாகும். இந்த வெளிப்படையான உறுப்புகள் படைப்பினங்களின் உரிமைகளைச் செலுத்துவதற்காக மட்டும் கிடையாது. அல்லது படைப்பின உரிமையை நிறைவேற்றாமல் குறை ஏற்பட்டால் இவற்றின் மூலம் நீங்கள் விசாரிக்கப்படுவீர்கள் என்பது மட்டும் கிடையாது. மாறாக பல காரியங்கள் உள்ளன. அவற்றுடன் படைப்பினங்களுக்கு நேரடி தொடர்பு எதுவும் இருக்காது. அவற்றின் மூலம் படைப்பினங்களுக்கு எந்த விதமான நன்மையும், தீமையும் ஏற்படுவதில்லை. நாம் ஆழ்ந்த பார்வையுடன் பார்த்தோம் என்றால், மனிதன் செய்யக்கூடிய சில செயல்கள் தனக்கே நன்மை, தீமைகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. ஆனால் அல்லாஹ் செய்வதற்கும், தவிர்ந்திருப்பதற்கும் கட்டளையிட்டுள்ளான். தவிர்ந்திருப்பதைப் பற்றி கட்டளை இருக்கும் போது அதனை மனிதன் செய்தால் அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட எல்லைகளை மீறுபவராகி விடுகின்றார். அல்லாஹ் ஏற்படுத்திய தடைகளை உடைப்பவராகி விடுகின்றார்.

மேலும் செய்வதனைக் குறித்துள்ள கட்டளை ஒன்றை செய்யாமல் இருந்தால் மனிதன் இறைவனுக்கு கட்டுப்படுவதிலிருந்து வெளியேறுபவனாகி விடுகின்றான். ஆக மனிதன் இறைவனது கட்டளைக்கு மாற்றமான செயல்களைச் செய்து இறைவனால் நியமிக்கப்பட்ட எல்லைகளை உடைத்து, தக்வாவிலிருந்து தூரம் விலகிச் சென்று விடுகின்றான். மேலும் எந்த அளவுக்கு தக்வாவிலிருந்து விலகிச் செல்கிறாரோ அந்த அளவுக்கு அவர் சய்த்தானின் மடியில் வந்து விடுகிறார்.

**இதனால் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்:**

ஒரு மூஃமின் என்பவர் இறைவனது விருப்பத்திற்கு மாற்றமாக செயல்படாமல் இருப்பார் என்பது மட்டும் கிடையாது. மாறாக, மறைந்திருந்து தாக்கக்கூடிய சய்த்தானின் தாக்குதலிலிருந்து கவனமாக இருக்க வேண்டும். தாக்கி விடாதபடி எந்நேரமும் சய்த்தானின் தாக்குதலின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். இந்தக் கவனத்தின் மூலம் சய்த்தானின் மறைவான தாக்குதலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். சய்த்தானின் தாக்குதல் பல்வேறு வழிகள் மூலம் நடைபெறுகிறது. இந்தக் காலத்தின் கண்டுபிடிப்புகளில் பல தானாகவே மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியதாக உள்ளது. அது நல்ல நோக்கத்திற்காகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சய்த்தானின் தாக்குதல் ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது. அல்லது சய்த்தானின் தாக்குதல் நடைபெறக்கூடிய இடங்களில் அது பயன்படுத்தப்படுகின்றது. இபாதத்துகளிலிருந்து தூரம் இழுத்துச் செல்லக்கூடியதாக அது இருக்கிறது. ஒழுக்கத்தில் தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. வெளிப்படையாக மனிதன் இது எனது சொந்த விசயங்களாகும் என எண்ணுகிறான். நான் சூதாடுகின்றேன். இரவு வெகு நேரம் வரை இன்டர்நெட்டில் படங்கள்

பார்க்கின்றேன். டி.வி. பார்க்கின்றேன். மேலும் இதுபோன்ற வேலைகளைச் செய்கின்றேன். மனிதன் செய்யக்கூடிய பல தவறான வேலைகளைச் செய்கின்றான். இதனால் மற்றவர்களுக்கு என்ன? அவரது இந்த எண்ணத்தின்படி இதன் மூலம் மற்றவர்களுக்கு எந்த தொல்லையும் இல்லை. ஏனென்றால் இதன் மூலம் யாருக்கும் அவர் நேரடியாக தீங்கிழைப்பதில்லை என்று எண்ணுகிறார்.

ஆனால் இறைவனது விருப்பத்திற்கேற்ப இல்லாத, இறைவனது விருப்பத்திற்கு எதிராக உள்ள தவறான செயல்கள், இறைவனது இபாதத்துகளிலிருந்து அவரை தூரம் விலக்கி விடுகிறது. அல்லாஹ்வின் உரிமைகளைச் செலுத்துவதிலிருந்து தூரம் விலக்கி விடுகிறது. மேலும் அடியார்களின் உரிமைகளைச் செலுத்துவதிலிருந்தும் தூரம் விலக்கி விடுகிறது.

இந்த நாடுகளில் மது, சூது, இன்டர்நெட், மோசமான, வீணான திரைப்படங்கள், தீய நட்பு போன்றவை வீட்டை அழிப்பது மட்டுமல்லாமல் இளைஞர்களை தவறான வழியில் செலுத்தி இறைவனது இருப்பில் நம்பிக்கை கொள்வதிலிருந்து விலக்கி முழு சமுதாயத்திலும் நோய் பரவுவதற்கு அவர்களைக் காரணமாக்கி விடுகிறது.

எனவே இறைவன் கூறுகின்றான்: உங்களது ஒவ்வொரு உறுப்பையும், ஒவ்வொரு சிந்தனையையும் இறை விருப்பத்திற்கேற்ப தகுந்த நேரத்தில் உபயோகிப்பது உங்களை தக்வாவில் முன்னேறச் செய்கிறது. இதற்கு எதிரான செயல்கள் உங்களை சய்த்தானின் மடியில் தள்ளி விடுகிறது.  சய்த்தானின் மடியில் விழக்கூடியவர் நிச்சயமாக நஷ்டவாளி ஆவார்.

இந்த வசனங்களில், அதாவது இதன் மொழியாக்கத்தையும் நீங்கள் கேட்டீர்கள். இதில் அல்லாஹ்தஆலா கூறுகின்றான்: நம்பிக்கை கொண்ட பின்னர் தக்வாவை மேற்கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்ளுங்கள். உங்களுக்கு இந்த உலகம், அதன் பொலிவு, பளபளப்பு, சுக போகங்கள் போன்றவையே எல்லாம் என்று ஆகிவிடக் கூடாது. மாறாக அல்லாஹ்வின் விருப்பத்திற்காக நீங்கள் என்ன அமல் செய்துள்ளீர்கள் என்பதைப் பாருங்கள்.

அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக செய்யப்பட்ட செயல்கள் மட்டுமே மறுமையில் பயனளிக்கக் கூடியதாகும்.  இவ்வுலகிலும் பயனளிக்கக் கூடியதாகும். உலகின் அனைத்துப் பொலிவுகளும், சுகபோகங்களும் இவ்வுலகிலேயே நின்றுபோய் விடக்கூடியவையாகும்.

எனவே தன்னை ஆய்வு செய்து கொண்டேயிருங்கள்.  ஏனென்றால் மனிதன் தன்னைத்தானே கவனமற்று இருப்பது தான் பாவங்களின் ஆணி வேர் ஆகும்.  இறைவனை மறந்து விடுகின்றான்.  மறுமையின் நிலையான வாழ்வில் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக வேண்டுமென்றால், இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்தவாறு அவனது விருப்பமான பாதைகளைத் தேடுவது அவசியமாகும்.  தனது பிறப்பின் நோக்கத்தைக் கண்டறிவது அவசியமாகும்.

நான் ஓதிய முதல் வசனம் திருமணத்தில் ஓதப்படக்கூடிய வசனங்களில் ஒரு வசனமாகும். அல்லாஹ்தஆலா தானாகவே மனிதனுக்கு மறுமையின் சிந்தனையைப் பற்றி கவனமூட்டுகின்றான். அத்துடன் பிறக்கக்கூடிய சந்ததிகளின் தர்பிய்யத், அவர்களை உலகத்திற்குப் பகரமாக நன்மையில் முன்னேறுபவர்களாக ஆக்க வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டுகிறான்.  நிக்காஹ்வில் ஓதக்கூடிய வசனங்களில் இதுவும் ஒரு குறிப்பான வசனம் ஆகும். ஏனென்றால் நல்ல சந்ததி, இறை விருப்பத்தினைப் பெறுவதற்கு முயற்சி செய்யக்கூடிய சந்ததி, தனது மறுமையை சீர்படுத்தக்கூடியதாக இருக்கும்.  அதே வேளையில் நல்ல சந்ததிகளின் அமல் மற்றும் அவர்களின் துஆக்கள், பெற்றோர்களுக்காக அவர்கள் செய்யக்கூடிய துஆக்கள், பெற்றோர்களின் தர்ஜாவை மறுமையில் உயர்த்துவதற்குக் காரணமாக அமைகின்றது.

எனவே அல்லாஹ்தஆலா கூறுகின்றான்: திருமண நேரத்தில் இந்த விசயத்தை நினைவில் கொள்ளுங்கள். அதாவது உலகம், அதன் அனைத்து பொலிவுகளும், சுகபோகங்களும் தற்காலிகமானதாகும். திருமணம், உலகத் தொடர்பு இவை அனைத்தும் தற்காலிக சுகங்களாகும்.  உண்மையான சுகம் இறைவனது விருப்பத்தினைப் பெறுவதில் தான் உள்ளது.  அது இவ்வுலகிலும் கிடைக்கிறது. அதன் கனிகளை ஒரு மூஃமின் மறுமையிலும் சுவைக்கின்றார்.

எனவே அல்லாஹ் ஒரு மூஃமினுக்கு மீண்டும் மீண்டும் பல்வேறு கோணங்ளில் எச்சரிக்கை செய்யவும், அறிவுறுத்தவும் செய்கின்றான். இறைவனை ஒருபோதும் மறக்காதீர்கள். தக்வாவில் நிலைத்திருங்கள். இம்மையையும் மறுமையையும் சீர்படுத்தக்கூடிய செயல்களைச் செய்யுங்கள். நீங்கள் இவ்வுலகிலும் இறை விருப்பத்தை பெறக்கூடிய மக்களாக வேண்டும். மறுமையிலும் அல்லாஹ்வின் விருப்பத்தினைப் பெறக்கூடியவர்களாக வேண்டும். அல்லாஹ் உங்களது ஒவ்வொரு செயலையும் நன்கு அறியக்கூடியவனாவான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவனது பார்வையிலிருந்து மனிதனுடைய சின்னச்சின்ன அமல்கள் கூட மறைவானதல்ல. ஒவ்வொரு அமலுடைய கணக்குகளும் உள்ளன. ஆனால் மனிதன் தனது பாதத்தைக் கவனத்துடன் வைக்க வேண்டிய அவசியம் உள்ளது. நம்பிக்கை கொள்வதும், நம்பிக்கை கொண்டுள்ளோம் என வாதம் செய்வதும் மட்டும் போதாது. மாறாக தக்வாவின் வழிகளைத் தேடுவதும், அதன்படி அமல் செய்வதும் அவசியமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கூட்டத்தில் கூறுகின்றார்கள்:**

இஸ்லாத்தில், உண்மையான வாழ்வு ஒரு மரணத்தை விரும்புகிறது. அது கசப்பானதாகும். ஆனால் யார் அதனை ஏற்றுக் கொள்வாரோ இறுதியில் அவர் தான் உயிர் பெறுவார்.

ஹதீஸில் வருகிறது: மனிதன், உலக விருப்பங்களையும், சுகங்களையும் சொர்க்கம் எனக் கருதுகிறான். ஆனால் அது நரகமாகும். நற்பேறு பெற்ற மனிதன், இறை வழியில் கஷ்டங்களை மேற்கொள்கிறார். அதுதான் சொர்க்கமாக இருக்கிறது. உலகம் அழியக்கூடியதாகும். அனைவரும் மரணத்திற்காகவே பிறந்துள்ளோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இறுதியில் ஒரு நேரம் வருகிறது. அப்போது அனைத்து நண்பர்களும், அன்பர்களும், சொந்த பந்தங்களும் பிரிந்து போய் விடுகிறார்கள். அப்போது மகிழ்ச்சிக்குரியதாகக் கருதப்பட்ட தகாத இன்பங்கள் அனைத்தும் கசப்பானதாகத் தோன்றுகிறது. உண்மையான மகிழ்ச்சியும் நிம்மதியும் தக்வா இல்லாமல் கிடைக்காது. தக்வாவின் படி நிலைநிற்பது ஒரு வகையில் விசத்தை அருந்துவதாகும். அதாவது வெளிப்படையில் மிகவும் கடினமானதாகும்.

முத்தகிகளுக்கு அல்லாஹ் நிம்மதிக்கான எல்லா விதமான ஏற்பாட்டையும் செய்து விடுகிறான். மனிதன் தக்வாவை மேற்கொள்ளும் போது நிம்மதிக்கான எல்லா விதமான ஏற்பாட்டையும் அல்லாஹ் செய்கின்றான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

مَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا ۙ وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

***அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். அவன் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவு அளிப்பான். (65:3-4)***

எனவே மகிழ்ச்சிக்கான வழி தக்வா ஆகும். ஆனால் நாம் தக்வாவினை அடைவதற்கு நிபந்தனைகளை ஏற்படுத்திக் கொண்டே செல்லக்கூடாது. தக்வாவை மேற்கொள்வதன் மூலம் கேட்பது கிடைக்கும். இறைவன் கருணையாளனும் இரக்கமுள்ளவனும் ஆவான். தக்வாவை மேற்கொள்ளுங்கள். நீங்கள் விரும்புவதை அவன் தருவான். அல்லாஹ்தஆலா இதனைத் தந்தால் நாங்கள் நன்மைகள் செய்வோம் என நிபந்தனைகள் வைக்கக் கூடாது. மாறாக நன்மைகளைச் செய்யுங்கள். தக்வாவை மேற்கொள்ளுங்கள். இறை நெருக்கத்தை மேற்கொள்ளுங்கள். பிறகு நீங்கள் கேட்பதை அவன் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும்.

எனவே தக்வாவின் படி செல்வதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் அனைத்து விதமான அருள்களையும் பெறக்கூடியவனாக ஆக முடியும்; ஆகி விடுவான். ஆனால் நாம் நம்மை எப்பொழுதும் ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டிய அவசியமும் உள்ளது. இக்காலத்தில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்து உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்போம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். தக்வாவின் படி செல்வதற்கு உறுதிமொழி எடுத்துள்ளோம். எனவே நாம் நமது சொல்லையும், செயலையும் ஒன்றாக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

தக்வாவின் படித்தரங்கள் மிகவும் கடினமானவையாகும். இறைவனது விருப்பத்தின்படி செல்லக் கூடியவரால் தான் அதனை கடக்க முடியும். அவன் விரும்புவதை செய்ய வேண்டும். தனது விருப்பத்தின்படி செயல்படக் கூடாது. செயற்கையான காட்டுதல் மூலமாக யாராவது பெற விரும்பினால் ஒருபோதும் முடியாது. தக்வா, காட்டுதல் மூலமாக பெறக்கூடியது அல்ல. காட்டுதல் மூலமாக அது ஒருபோதும் நடக்காது. இதற்கு இறைவனது அருள் அவசியமாகும். ஒருபுறம் துஆ செய்வதன் மூலமாகவும், மறுபுறம் முயற்சி செய்வதன் மூலமாகவும் அதனை பெற முடியும். இறைன் துஆ மற்றும் முயற்சி ஆகிய இரண்டையும் வலியுறுத்தியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் தூய்மையாக்காத வரை யாரும் தூய்மையாக முடியாது. இறைவனது வாசலில் மன்றாடலுடனும் உருக்கத்துடனும் தன்னகத்துடனும் ஒருவரது ஆன்மா விழும் போது இறைவன் அவனது துஆவை ஏற்றுக் கொள்வான். பிறகு அவன் முத்தக்கி ஆகி விடுவான். அப்போது அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மார்க்கத்தை புரியக் கூடியவனாகி விடுவான்.

தன்னடக்கத்தையும் மன்றாடலையும் மேற்கொள்ளுங்கள். இதற்கும் இறைவனது அருள் அவசியமாகும். இறைவனது அருள் இருந்தால் இவை கிடைக்கும். இவை கிடைக்கும் போது தக்வா கிடைக்கும். தக்வா கிடைக்கும் போது தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது மார்க்கம் அதாவது இஸ்லாத்தின் உண்மையை மனிதனால் புரிய முடியும். இவை இல்லாமல் தீன், தீன் என்று என்னதான் சப்தமிட்டுக் கூறினாலும் இபாதத் போன்றவற்றைச் செய்தாலும் அது சடங்கு போன்றதும், ஒரு கற்பனையும் ஆகும். அவர் மூதாதையர்களிடமிருந்து கேட்டுப் பின்பற்றி வருகிறார் என்பதாகும். பாட்டனாரும், தகப்பனாரும் இவ்வாறு செய்கின்றனர். முஸ்லிம் வீட்டில் பிறந்துள்ளேன். எனவே முஸ்லிம் ஆவேன். அஹ்மதி வீட்டில் பிறந்துள்ளேன். எனவே அஹ்மதி முஸ்லிம் ஆவேன் என்றும், அதனை பின்பற்றி இவர் செயல்படுகிறார் என்பதும் ஆகும். இவ்வாறு ஒருபோதும் தக்வாவைப் பெற முடியாது. உண்மையான விசயம் தக்வா ஆகும். தக்வா, முயற்சி, செயல் மூலமும் தன்னடக்கம், பணிவை மேற்கொள்வதன் மூலமும், துஆ செய்வதன் மூலமும் தான் கிடைக்கிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மூதாதையர்களைப் பின்பற்றி, தான் கேட்ட மற்றும் கேட்காததை எல்லாம் செயல்படுத்துவதில் எந்தவித உண்மையும், ஆன்மீகமும் இருப்பதில்லை. வெறும் தக்லீது செய்வதினால் மட்டும் ஆன்மீகம் வளராது.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தக்வாவை மேற்கொள்ளுங்கள். ஏனென்றால் தக்வாவிற்குப் பிறகு தான், இறைவனது அருள்கள் இறங்குகின்றன. முத்தக்கி உலகக் கஷ்டங்களிலிருந்து காப்பாற்றப்படுகிறார்.

இறை அருளால் ஜமாஅத் என்ற ரீதியில் இறைவனது எண்ணற்ற அருள்களை நாம் ஜமாஅத்தின் மீது பார்க்கின்றோம். ஜமாஅத்தின் முன்னேற்றத்தையும் நாம் பார்க்கின்றோம். ஜமாஅத்துடன் அல்லாஹ்வின் சிறப்பான நடைமுறையையும் நாம் பார்க்கின்றோம். மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலும் அல்லாஹ்தஆலா ஜமாஅத்தினை எதிரியின் பிடியிலிருந்து காப்பாற்றி வந்துள்ளான். ஜமாஅத்தில் ஒரு நல்ல எண்ணிக்கை நிச்சயமாக தக்வாவின் படி செல்லக்கூடிய அல்லாஹ்தஆலாவின் விருப்பத்தினைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் உடன்படிக்கை செய்த பின் நம்மில் ஒவ்வொருவரும் தக்வாவின் தரத்தை அடைய வேண்டும். அதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். ஓர் உண்மையான முஸ்லிமிற்கு கிடைக்க வேண்டிய அந்த இறை நெருக்கம் நமக்கும் கிடைக்க வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்தது நமக்கு கிடைக்க வேண்டும். அது என்னவென்றால் நாம் இறைவனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:** நீங்கள் அல்லாஹ்வை மறந்து விட்டீர்கள் என்றால் பிறகு அல்லாஹ்வுக்கு அதில் எந்த இழப்பும் இல்லை. இந்த கவனமின்மை உங்களையே இழப்பிற்குரியவர்களாக ஆக்கி விடும்.

இறைவனை மறக்கக்கூடியவர்கள் ஈமானில் பலவீனமானவர்கள் ஆவார்கள். முழுமையான ஈமான் அவர்களிடம் இருப்பதில்லை. நாம் ஒருநாள் அல்லாஹ்வின் முன்பு ஆஜராக வேண்டும் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் அவர்களது ஒழுக்க ஆன்மீக நிலை சீர்கெட்டுப் போகக்கூடிய அமல்களை அவர்கள் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். உலகத்தை விட மார்க்கம் மேலானதாக ஆவதற்குப் பகரமாக மார்க்கத்தை விட உலகம் மேலானதாகி விடுகிறது. இப்படிப்பட்ட உலகவாதிகள் மறுமையில் இறைவனுடைய நடைமுறையை எவ்வாறு காண்பார்கள் என்பதை இறைவன் தான் நன்கறிவான். ஆனால் இவ்வுலகிலும், உலகில் மூழ்கிக் கிடந்ததினால் அவர்களது மன நிம்மதி சீர்குலைந்து விடுகிறது. பலரையும் நாம் பார்க்கின்றோம். சின்னதொரு பொருளாதார இழப்பினால் உலக வீழ்ச்சியினால் எந்த அளவு சீர்குலைந்து விடுகின்றனர் என்றால், அதன் பிறகு எதற்கும் தகுதியற்றவராகி விடுகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: ஈமான் கொண்டுள்ளதாக வாதம் புரிகிறீர்கள். ஆனால் தக்வாவின் படி செயல்படுவதற்கு முயற்சி செய்யவில்லை என்றால், ஈமானுடைய வாதத்துடன் இவ்வாறான முயற்சி இல்லையென்றால் அல்லாஹ்வுக்குரிய உரிமைகள் மற்றும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதன் பக்கம் கவனம் இல்லையென்றால், இந்த விசயம் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றது. ஈமானில் பலவீனம் இருந்து சீர்திருத்தத்தின் பக்கம் கவனம் இல்லையென்றால் பிறகு உலகில் நிம்மதியற்ற வாழ்வுதான் இருக்கும். இது மட்டுமல்ல. அப்படிப்பட்ட மனிதர் (ஃபாஸிக்) அதாவது கட்டுப்படாதவரைச் சேர்ந்தவராவார். ஃபாஸிக் என்பதற்கு இங்கு சரீஅத் கட்டளைகளின்படி நடப்பதாக உடன்படிக்கை செய்த பின்னர், சில அல்லது முழு சரீஅத் கட்டளைகளுக்கும் எதிராக செயல்படுவது என்பது பொருளாகும்.

மேலும் திருக்குர்ஆனில் வேறு இடங்களில் நாம் பார்த்தோம் என்றால், அந்த வசனங்களின் அடிப்படையில் ஃபாஸிக் என்ற சொல்லுக்கு இறை அருளுக்கு கண்ணியம் அளிக்காமல் இருத்தல், கட்டுப்படுதல் என்ற வட்டத்திலிருந்து வெளியேறுவது என்ற பொருளும் உள்ளது. அதாவது அப்படிப்பட்டவர் அருள்களுக்கு கண்ணியம் அளிக்காமல் கட்டுப்படுதல் என்ற வட்டத்திலிருந்து வெளியேறியவராகக் கருதப்படுவார். இவ்வாறே கட்டுப்படாதவரைச் சேர்ந்தவராகவும் தீய நடத்தை உடையவராகவும் கருதப்படுவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பின்னர், உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவோம் என உடன்படிக்கை எடுத்துள்ளோம். எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் சரி இறைவனுடைய கட்டளையை மறக்க மாட்டோம். இரண்டாவது, ஓர் அஹ்மதி மீது அல்லாஹ்வின் கருணை என்னவென்றால் அவருக்கு நபி (ஸல்) அவர்களுடைய பணியைத் தொடர்வதற்குரிய அருளிலிருந்து பங்களித்துள்ளான். இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக அல்லாஹ்தஆலா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை, அவர்களது வடிவில் அனுப்பி இருக்கின்றான்.

அல்லாஹ்வின் அருளில் மிகப்பெரிய அருள் நுபுவ்வத் ஆகும். இது தொடர்பாக முஸ்லிம்களிடம் இரண்டு விதமான செயல்பாடுகளை நாம் பார்க்கின்றோம். நுபுவ்வத்திற்காக துஆவும் செய்கின்றனர். மறுக்கவும் செய்கின்றனர். நம்மீது அல்லாஹ்வின் மாபெரும் கருணையாகும். நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அவன் நபி (ஸல்) அவர்களுடைய அடிமையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் கிடைக்கக்கூடிய அருளினை ஏற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளித்துள்ளான். நாம் இந்த அருளில் பங்குதாரர்கள் ஆகி விட்டோம். மேலும் நாம் அருளிலிருந்து பங்கு பெறக்கூடியவர்களாக அதற்கு நன்றி செலுத்துபவர்களாக எப்போது ஆவோம் என்றால் நாம் உண்மையாகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கூற்றுக்கள், எதிர்பார்ப்பின்படி முழுமையாக செயல்படும் போது தான், அதற்கான முயற்சி செய்யக்கூடியவர்களாகும்போது தான் ஆவோம். இல்லையென்றால் நாம் இறைவனை மறக்கக்கூடியவர்களாக தனது கவனமின்மையில் மூழ்கக்கூடியவர்களாக ஆகி விடுவோம். இறுதியாக நாம் இறை கோபத்தினைப் பெறக்கூடியவர்களாக ஆகி விடுவோம்.

நாம் இதனை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களுடைய அடிமையில் தவ்ஹீதை நிலைநிறுத்துவதற்காக அல்லாஹ்வின் இருப்பை நிரூபிப்பதற்காகவும் வந்தார்கள். உண்மையான தக்வாவும் இறைவனுடைய ஏகத்துவத்தின் மீது முழுமையான நம்பிக்கை இருக்கும் போதுதான் நிலைபெறும். அவனது விருப்பமும் நோக்கமும் குறிக்கோளாக இருக்கும் போது தான் கிடைக்கப் பெறும். இறைவனது தவ்ஹீதில் தன்னை அர்ப்பணிக்கும் போதுதான் உண்மையான தக்வா மனிதரிடம் ஏற்படும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நாவினால் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறிக் ெ காண்டு உள்ளத்தில் ஆயிரக்கணக்கான சிலைகளைக் கொணடிருப்பதற்குரிய பெயர் தவ்ஹீது ஆகாது. எவர் தனது செயலுக்குச் சூழ்ச்சி, தந்திரம் மற்றும் திட்டங்களுக்கு இறைவன் போன்ற கண்ணியம் அளிப்பாரோ அல்லது ஏதாவது ஒரு மனிதர் மீது இறைவன் மீது நம்பிக்கை வைப்பது போன்று நம்பிக்கை வைப்பாரோ அல்லது தனது நஃப்ஸிற்கு இறைவனுக்கு கொடுக்க வேண்டிய கண்ணியம் போன்று கண்ணியம் அளிப்பாரோ இந்த அனைத்து வகையிலும் அவர் இறைவனுடைய பார்வையில் சிலை வணங்கி ஆவார். சிலை என்பது தங்கம், வெள்ளி, பித்தளை மற்றும் கல் போன்றவற்றால் செய்யக்கூடியவை மட்டுமல்ல. அதன் மீது நம்பிக்கை கொள்வது மட்டுமல்ல. மாறாக இறைவனுக்கு கொடுக்க வேண்டிய கண்ணியம் போன்று கண்ணியம் கொடுக்கக்கூடிய ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு செயலும் இறைவனது பார்வையில் சிலை ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். அதாவது இறைவன் நம்மிடம் விரும்பும் உண்மையான தவ்ஹீது, மேலும் எதனை ஏற்றுக் கொள்வதன் மூலம் இரட்சிப்பு கிடைக்கப் பெறுமோ அது இறைவனை அவனது இருப்பில் எல்லா விதமான இணையிலிருந்தும் அது சிலையாக இருந்தாலும் சரி, மனிதனாக இருந்தாலும் சரி, சூரியனாக இருந்தாலும் சரி, சந்திரனாக இருந்தாலும் சரி அல்லது தனது நஃப்ஸாக, தனது திட்டமாக, தனது சூழ்ச்சியாக, தந்திரமாக இருந்தாலும் சரி, அனைத்தையும் விட உயர்வானதாகக் கருதுவதும் அவனை விட ஆற்றல் பெற்றவனாக வேறெதனையும் கருதாததும் ஆகும். வேறு யாரையும் உணவளிப்பவனாகக் கருதாமல் இருப்பதும், வேறு யாரையும் நன்மை தரக்கூடியவராகவும் தீங்கிழைக்கக்கூடியவராகவும் கருதாமல் இருப்பதும், அத்துடன் அல்லாஹ் எல்லாவற்றையும் விட மேலானவன் என்பதை நினைவில் கொள்ளவும் வேண்டும். உலகில் மனிதனுக்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு கண்ணியமும், இழிவும் இறைவனுடைய கையில் தான் உள்ளது. ஒருவர் மற்றவரை கண்ணியப்படுத்தவும் முடியாது. இழிவுபடுத்தவும் முடியாது. ஆக இதுதான் உண்மையான தவ்ஹீது ஆகும். அல்லாஹ்தஆலா கண்ணியம் அளிக்கக்கூடியவனும், இழிவை தரக்கூடியவனும் ஆவான் என நம்பிக்கை கொள்வது உண்மையான தவ்ஹீது ஆகும்.

அல்லாஹ்தஆலாதான் மனிதனை கண்ணியத்திற்குரியவனாக ஆக்குகின்றான். மேலும் அவனது தவறான செயல்களினால் அவனை இழிவிற்குரியவனாகவும் ஆக்குகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனைத் தவிர வேறு யாரையும் உதவியாளராகக் கருதாமல் இருப்பது, இரண்டாவது தனது அன்பை அவனுடன் சிறப்பானதாக ஆக்குவது, தமது இபாதத்துகளை அவனுக்காக சிறப்பானதாக ஆக்குவது, தனது மன்றாடலை அவனுடன் சிறப்பானதாக ஆக்குவது, சில மக்கள் மனிதர்களுக்கு முன்பு குனிகின்றார்கள். அவ்வாறு கூடாது. எல்லாவிதமான பணிவும் மன்றாடலும் இறைவனுக்காக மட்டுமே இருக்க வேண்டும். தனது நம்பிக்கைகளை எதிர்பார்ப்புகளை அவனிடம் மட்டுமே வைப்பது, தனது பயத்தை அவனுக்காக மட்டுமே சிறப்பானதாக ஆக்குவது தவ்ஹீது ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எந்தவொரு தவ்ஹீதும் கீழ்க்கண்ட மூன்று விதமான சிறப்புகள் இல்லாமல் முழுமை அடையாது. ஒன்று, இருப்பின் அடிப்படையில் தவ்ஹீது, அதாவது அவனது இருப்பிற்கு எதிரில் அனைத்தையும் ஒன்றுமற்றதாகக் கருதுவது, அதாவது அவற்றிற்கு எந்த விதமான உண்மையும் இல்லையெனக் கருதுவது, எல்லாவிதமான படைப்பும், எல்லா பொருள்களும் அழியக்கூடியதாகும். உண்மையில் அதற்கு எதிராக மதிப்பும் இல்லையெனக் கருதுவதும் ஆகும்.

இரண்டாவது, பண்புகளின் அடிப்படையில் தவ்ஹீது அதாவது ருபூபிய்யத் மற்றும் உலூகிய்யத், பரிபாலிப்பது மற்றும் வணங்குவதில் அவனுக்கு எதிரில் யாரையும் இணையாக்காமல் இருப்பது, பரிபாலிப்பவனும் அல்லாஹ்வே ஆவான். வணக்கத்திற்குரியவனும் அவன் மட்டுமே ஆவான். வெளிப்படையில் ரப் ஆகவும் பயன்தரக் கூடியவர்களாகவும் தென்படக் கூடியவர்கள், அதாவது மக்களிடமிருந்து உலக பயன்கள், நன்மைகள் கிடைக்கிறது. அது மனிதன் பயன்பெறுவதற்கு அல்லாஹ்தஆலா ஏற்படுத்திய வழிகள் ஆகும். அவர்களிடமிருந்து பலன் கிடைக்கும். அவர்கள் வாழ்வுக்கு காரணமாகவும் அமைவார்கள். இதனைப் பற்றி இது அல்லாஹ்வின் ஓர் அடையாளமாகும். அல்லாஹ்தஆலா ஒருவரை வழியாக ஏற்படுத்தியுள்ளானே தவிர ஒருவர் தானாக அதனை வழங்குவதற்கு தகுதியுடையவராக மாட்டார். உண்மையான எஜமானன் அல்லாஹ் ஆவான். இவர்கள் வழிகள் எனக் கருதுவதாகும்.

மூன்றாவது, தனது அன்பு, சத்தியம், மற்றும் விசுவாசம் தொடர்பான தவ்ஹீது ஆகும். அதாவது அன்பு செலுத்துவதிலும் வணக்கத்திலும் மற்றவர்களை இறைவனுக்கு நிகராகக் கருதாமல் இருப்பதும், அதில் தன்னை அர்ப்பணிப்பது போன்றவையாகும். யாரையும் இணையாக்காமல் மட்டும் இருக்கக் கூடாது. மாறாக அதில் மூழ்கி விட வேண்டும். இறை இருப்பில் தன்னைத்தானே மாய்த்துக் கொள்வதாகும். எனவே இந்த விசயங்கள் ஒரு மனிதரிடத்தில் இருந்தால் அவர் இறைவனை நினைவு கூர்வதற்குரிய உரிமையை செலுத்தக்கூடியவராக அழைக்கப்படுவார். தக்வாவின்படி செல்லக்கூடியவராக அழைக்கப்படுவார்.

தக்வாவின் உச்சத்தினைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தக்வாவின் உச்சம் இதுவாகும். அதாவது மனிதனுக்கு தனது இருப்பே இருக்கக் கூடாது. இதுதுான் உண்மையான தவ்ஹீது ஆகும் எனவும் கூறுகின்றார்கள்.

மனிதன் இந்த உச்சத்தைப் பெற்று விட்டால், தனது இருப்பை இறைவனது இருப்பில் மாய்த்து விட்டால் இதுதுான் தக்வாவின் உச்சம் ஆகும். உண்மையில் இதுதான் தவ்ஹீது ஆகும். ஒருவர் இந்த தரத்தை அடையும் போது உண்மையான தவ்ஹீதை ஏற்றுக் கொண்டவராகக் கருதப்படுவார். எனவே இறைவனது இருப்பை எல்லாவற்றையும் விட மேலானதாக கருதுவது தக்வா ஆகும். இதுதான் தவ்ஹீதில் நிலைநிற்றலும் ஆகும். அல்லாஹ் நமக்கு இந்த தரத்தை அடைவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **03.05.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456